Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

உண்மை — அஞ்சாமை — நடு நிலைமை

விலை: ரூ. 1-25

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹு ஆனி மீ 21 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 8 (05 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 188

இந்திய உணவு விநியோகம்:

## உள் அர்த்தத்தை ஸ்ரீலங்கா அரசு புரிந்துகொண்டு விட்டது

சென்னை, ஜூலை 4

இந்தியா உணவுப் பொருள்களை அனுப்புவதில் உள்ள உள் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு ஸ்ரீலங்கா அரசு தனது ராணுவ நடவடிக்கைகளைத் தளர்த்தியுள்ளது.



பாலசிங்கம்

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர் மத்தியில் திரு. பாலசிங்கம் உரையாற்றினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இந்தியாவின் நிவாரண உதவிகளை யாழ்ப்பாணத்து தமிழ் மக்கள் வயிற்றுப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கருதவில்லை; வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வாகவே கருதுகின்றனர்.

உணவுப்பொருள் விநியோகம் முடிவடைந்ததும் யாழ்பகுதியில் பெரும் தாக்குதல் ஒன்றுக்கு ஸ்ரீ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சீனாவிடமிருந்து ராணுவ உதவி?

புதுடில்லி, ஜூலை 4

ஸ்ரீலங்கா அரசாங்கம் சீனாவிடம் இருந்து இராணுவ உதவி கோரியுள்ளதாக இங்கு செய்திகள் கிடைத்துள்ளன

இது சம்பந்தமான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் ஸ்ரீலங்காவின் கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா சீனா சென்றிருந்த சமயம் இடம்பெற்றதாகத் தகவல்கள் கூறுகின்றன.

ஸ்ரீ லங்கா இதுவரை பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிடம் ஆயுதங்களை வர்த்தக ரீதியிலேயே விலை கொடுத்து வாங்கி வந்தது. அதனை உத்தியோக முறையில் ஒப்புக்கொண்டும் வந்தது.

அதற்கு மேலதிகமாக ஸ்ரீ லங்கா ஆயுதப்படையினருக்கு பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

எனினும் இந்தியா யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்களை விமானம் மூலம் போட்டதைத் தொடர்ந்து, ஸ்ரீ லங்கா ஏதாவது ஒரு நாட்டிடம் இராணுவ உதவி பெறுவதற்கு முயற்சித்து வந்தது தெரிந்ததே.

இந்தியாவின் விமான நடவடிக்கை இடம் பெற்ற கையோடு ஸ்ரீ லங்காவின் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவின் நெருங்கிய உறவினரான கல்வி மந்திரி பாகிஸ்தானுக்கும், சீனாவுக்கும் விஜயம் செய்திருந்தார். அவர் இரு நாடுகளிடமும் இராணுவ உதவிகோரியதாகச் சொல்லப்படுகிறது.

திரு. ரணில் விக்கிரமசிங்கா பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியாஉல் ஹக்கிடமிருந்து விசேட செய்தி ஒன்றைக் கொழும்புக்கு எடுத்துச் சென்றார். அதற்கான ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் பதிலை பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத் முதலி ராவல் பிண்டிக்கு எடுத்துச் சென்று பேச்சுக்களும் நடத்தினார்.

சீனாவுடன் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நடத்திய பேச்சின் போது இராணுவ உதவி குறித்து சீனத் தரப்பில் அனேகமாகச் சாதகமான பதிலே கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

எனினும் இவ்விடயம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுருப்பதாக அறியப்படுகிறது. தக்க தருணத்தில் சீனா ஸ்ரீலங்காவுக்கு உதவும் என இந்தியாவுக்குத் தகவல் எட்டியிருக்கிறது. (அ)

## ஊர்காவற்றுறை வாக்காளருக்கு 10 அம்சக் கடிதம்

### 'பொடிபுத்தா' அனுப்பியிருந்தார்

கொழும்பு, ஜூலை 5

'பொடிபுத்தா' என்று அழைக்கப்படும், நிக்கவரட்டியாவின் முன்னாள் எம். பி. முதியான்சே தென்னக்கூன் யாழ்ப்பாணம் வரும் முன்னர் ஊர்காவற்றுறைத் தொகுதி வாக்காளருக்கு தபால் மூலம் பத்து அம்சக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார்.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ தெரிவு செய்யப்பட்டால் அரசியல் சீர்திருத்தம் கோரிப் போராடுவேன்.

★ பிரதேச உதவி அரச அதிபர் மட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் செய்வேன்.

★ ஒவ்வொரு கிராமத்திலும் பாதுகாப்புக் கவுன்ஸில்கள் அமைக்கப் போராடுவேன்.

★ தறபோதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்க அமைப்பை ரத்துச் செய்யும்படி நாடாளுமன்றத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜூனில் மட்டும் 2,929 பேர் தமிழகம் வந்தனர்

சென்னை, ஜூலை 4

சென்றமாதம் மட்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து 2ஆயிரத்து 929 பேர் படகுகளில் தமிழகம் வந்தனர்.

மண்டபம் அகதிகள் முகாமில் இப்போது 8 ஆயிரத்து 362 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர். (இ-ஐ-எ)

## ஜே. வி. பியினர் கைது

கொழும்பு, ஜூலை 5

ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்த 60 பேர் கடந்த சில தினங்களில் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று அரசு அறிவித்துள்ளது. (இ-10)

# பொலீஸ்சித்திரவதைகள் காட்டுமிராண்டித்தனமானவை

### முறைப்பாட்டுக்காரருக்கு ரூ. 10 ஆயிரம் நஷ்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூலை 5

பொலீஸ் பாதுகாப்பில் உள்ள சந்தேக நபர்கள் மீது பொலீஸார் சித்திரவதை புரிகின்றனர். இது கவலை தருகிறது. இப்படியான செயல்கள் காட்டுமிராண்டித்தனமானவை மனிதத் தன்மை அற்றவை.

அடிப்படைஉரிமைகளை மீறியதாக அரசுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பு வழங்குகையில் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி மேற்கண்டவாறு கூறினர்.

முறைப்பாட்டுக் காரருக்கு பந்தாயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கும்படியும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முறைப்பாட்டுக் காரருக்கு நீதிமன்றச் செலவாக ஆயிரம் ரூபா வழங்கும்படியும் அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாணந்துறையைச் சேர்ந்த அமல் சுதத் சில்வா என்பவரே இந்த முறைப்பாட்டுக்காரர்.

கைது செய்யப்பட்ட பின்னர் பொலீஸ் நிலையத்தில் வைத்து பொலீஸார் சித்திரவதை செய்தனர் என்றும், மனிதத் தன்மையற்ற முறையில் தாம் நடத்தப்பட்டதாகவும் அமல் சுதத் சில்வா உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த முறைப்பாட்டில் தெரிவித்து இருந்தார்.

விசாரணை முடிவில் முன்கண்ட தீர்ப்பை வழங்கிய உயர் நீதிமன்றம் தெரிவித்ததாவது;

பொலீஸ் பாதுகாப்பில் உள்ள சந்தேக நபர்கள் மீது பொலீஸார் சித்திரவதை புரிகின்றனர். இது கவலையைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 4 கப்பல்களில் இந்திய நிவாரணஉதவி

கொழும்பு, ஜூலை 5

மேலும் நான்கு கப்பல்களில் நிவாரண உதவிப் பொருள்களை இந்தியா அனுப்ப உள்ளது.

ஸ்ரீலங்கா இதற்கு உடன்பட்டுள்ளதாக கொழும்பு அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நான்கு கப்பல்களில் உணவுப் பொருள்களை ஏற்றி, காங்கேசன் துறைமுகத்துக்குக் கொண்டு வந்து இறக்க ஒரு மாத காலம் செல்லும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இதனிடையில் 'ஐலண்ட் பிரைட்' கப்பல் இரண்டாவது முறையாக உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு சென்னையை விட்டு நாளை திங்கட்கிழமை புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதே வேளை, 'பொறுக்கா' கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடையலாம் என்று கூறப்படுகின்றது. (இ-எ)

## வளலாய், இடைக்காடு அச்சுவேலி அகதிகளுக்கு இந்திய நிவாரண உதவி

பலாலி, ஜூலை 5

இந்தியா வழங்கிய நிவாரண உதவிப் பொருள்கள் நேற்று வளலாய், இடைக்காடு, அச்சுவேலிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து இருபாலை, கோப்பாய், நீர்வேலிப் பகுதி முகாம்களில் இருந்தோருக்கு வழங்கப்பட்டன.

இருபாலை மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நீர்வேலி சீ.சீ.ரி.எம். பாடசாலை போன்ற முகாம்களில் வைத்து பொருள்கள் வழங்கப்பட்டன.

இருபாலை மகாவித்தியாலயத்தில் 456 பேருக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 170 பேருக்கும், நீர்வேலி சீ. சீ. ரி. எம். பாடசாலையில் 470 பேருக்கும் உணவுப் பொருள் வழங்கல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும் சிறுப்பிட்டி, ஆவரங்கால், புத்தூர்ப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப, ஜே. ஆர். கனவு கண்ட சாத்தான்களில் சீனுவும் ஒண்டோ பின்னை...!

## சுபநேரம்

05-07-1987
ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:-
8.57 முதல் 10.27 வரை

ராகுகாலம்:-
4.27 முதல் 5.57வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி முன்னிரவு 8.55 வரை

## உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

போராளிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரிக்கக் கோரி, நேற்று யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

காலையில் ஆரம்பமான உண்ணாவிரதம் மாலை வரை நடைபெற்றது. (இ-10)

## வவுணதீவில் 5 இளைஞர் கொல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வவுணதீவு காரைமடு என்ற இடத்தில் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

வெள்ளி காலை இச் சம்பவம் இடம் பெற்றது

விசேஷ அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலிலேயே ஐந்து பேர் கொல்லப்பட்டனர். (இ-10)

## கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தேடுதல் நடத்த இராணுவத்தினர் முஸ்தீபு

யாழ்ப்பாணம், ஜூலை 5

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மீண்டும் கடும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று தெரிகிறது.

இதற்கான நடவடிக்கைகளைத் தற்போது இராணுவத்தினர் எடுத்துள்ளனர்.

வடமராட்சி, கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளிலேயே தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென ஒவ்வொரு பகுதி இராணுவ முகாமுக்கும் அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் அனுப்பப்பட்டுள்ளனர். (இ—10)

## கப்டன் குப்தா கொழும்பு பயணமானர்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கப்டன் பீ. கே. குப்தா மீண்டும் நேற்று கொழும்பு பயணமானர்

காங்கேசன் துறைமுகத்தில் 'பொறுக்கா' கப்பலிலிருந்து இறக்கப்படும் உணவுப் பொருள்களைப் பார்வையிட்ட பின் நேற்று மாலை விமான மூலம் அவர் கொழும்பு பயணமானர். (இ-10)

## இறந்தோர் இளவாலை நல்லூர் வாசிகள்

பொன், ஜூலை 4

மேற்கு ஜெர்மனியில் அகதி முகாம் ஒன்றில் வெடிவிபத்தின் போது உயிரிழந்தவர்கள் நல்லூரைச் சேர்ந்த ஞானேந்திரன், இளவாலை போயிட்டியைச் சேர்ந்த அருள் அழகன் என்று தெரிய வந்துள்ளது.

அருள் அழகன், இளவாலை புனித ஹென்றி கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. ராஜநாயகத்தின் புதல்வன்.

காஸ் சிலிண்டர் வெடித்ததினுல் ஏற்பட்ட தீ விபத்தில் தான் இருவரும் கொல்லப்பட்டனர்—இப்படி மேற்கு ஜெர்மனியில் இருந்து வந்த செய்திகள் தெரிவித்தன. (இ-ஐ-எ)

## வல்லரசுப் போட்டி; இந்தியாவுக்கு ஆபத்து

### மந்திரி பந்த் சொல்கிறார்

புதுடில்லி, ஜூலை 5

பக்கத்து நாடுகளில் நவீன ஆயுதங்கள் குவிப்பும் இந்து மாகடலில் வல்லரசுப் போட்டியும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்து உள்ளன.

இப்படி இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பந்த் தெரிவித்தார்.

இந்திய பாதுகாப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவம் தொடர்ந்து நிலைகொள்ள முடியாது வெளியேறியே ஆகவேண்டும்

### செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி மக்களுக்கு ஆறுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

மக்கள் வாழும் பகுதிகளில் அத்துமீறி நுழையும் இராணுவம் எந்த நாட்டிலும் தொடர்ந்து நிலைகொண்டது கிடையாது.

இதேபோல் உங்கள் பகுதிகளிலும் அத்துமீறி நுழைந்துள்ள இராணுவம் எப்படியும் வெளியேறித்தான் ஆகவேண்டும். அப்பொழுது நீங்கள் நிம்மதியாக வாழலாம்.

தெல்லிப்பளை, அளவெட்டிப் பகுதி மக்களை சந்தித்து உரையாடிய இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் இவ்வாறு கூறினர்.

இந்திய நிவாரணப் பொருள்களை வழங்கச் சென்ற இந்த அதிகாரிகளிடம் மக்கள் தமது குறைகளைத் தெரிவித்தனர்.

'' நாம் பாதுகாப்பாக வாழவேண்டும்', 'எமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வழிசெய்யுங்கள்''

''நிவாரண உணவுப் பொருள்கள் கொண்டு வந்த கப்பலில் எம்மையும் ஏற்றிச் செல்லுங்கள்''.

இவ்வாறு செஞ்சிலு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவும் ஸ்ரீலங்காவும் மீண்டும் முட்டிக் கொள்ளலாம்

### புரொண்ட்லைன் கூறுகிறது

புதுடில்லி, ஜூலை 4

மனிதாபிமான அடிப்படையில் பெரிய அளவில் நிவாரண உதவிகளை வழங்குவதன் மூலம் தமிழரின் அடிப்படைப்பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவிட முடியாது. இந்தியாவும் ஸ்ரீலங்காவும் மீண்டும் முட்டிக்கொள்ளலாம்.

புரொண்ட்லைன் சஞ்சிகையில் புதுடில்லியில் இருந்து திரு. மனேஜ் ஜோஷி எழுதியுள்ள கட்டுரையில் இக்கருத்து வெளியானது.

''இந்தியாவுக்கு படி இறக்கம்'' என்ற தலைப்பில் இக்கட்டுரை ஜூன் 27 - ஜூலை 10 இதழில் வெளியாகி யிருக்கிறது.

மனிதாபிமான ரீதியான நிவாரண உதவிகள் எவ்வளவு பெரியனவாக இருப்பினும் அது அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுது.

இனப் பிரச்சினைக்குத் தன்னுல் தீர்வு காண முடியும் என்று ஸ்ரீலங்கா நினைத்துச் செயற்பட்டால் ஒழிய ஏதாவது அபிவிருத்தியை காண முடியாது.

பிந்திய தாக்குதல்களைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கா அரசின் உத்தியின் வரையறை தெரிந்த ஒன்றே.

இந்த நிலையில் இந்தியாவும் ஸ்ரீலங்காவும் மீண்டும் முட்டிக்கொள்ளும் வழியைக் கைக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இப்படி 'புரொண்ட்லைன்' கட்டுரையில் மனேஜ் ஜோஷி தெரிவித்திருக்கின்றார். (இ-எ)

## தொண்டமானறில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

நேற்றுக் காலை 8-30 மணி அளவில் தொண்டமானறு முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்றது.

இம்மோதலின் போது இராணுவ தரப்பில் பலர் கொல்லப்பட்டதுடன் ஓர் இராணுவ டிரக் வண்டியும் முற்றாகச் சேதமாக்கப்பட்டது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

### ரேனியோ

பாதுகாப்பான சூழ் நிலையில் சகலவிதமான அச்சுவேலைகளையும் சிறந்தமுறையில் செய்து கொள்ளவும் -ரேனியோ பிரதிகள் நவீன முறையில் செய்துகொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகராச் சந்திக்கு அருகாமை) (3214)


## கம்யூனிஸ்ட் கட்சி பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 44 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி யாழ்ப்பாணம், பலாலி வீதி 15/1 இலக்கத்தில் உள்ள மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் யாழ் மாவட்டக் குழு பதில் செயலாளர் திரு. க.நவரத்தினம் தலைமை வகிப்பார்.

திருவாளர்கள் அ. வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், டொமினிக் ஜீவா, க. திருநாவுக்கரசு ஆகியோர் உரை நிகழ்த்துவர். (உ-எ)

# பாலை சந்தைப்படுத்த முடியாத நிலையில் உற்பத்தியாளர் அவதி

## சிலர் வீதிகளில் வைத்து விற்கின்றனர்

மானிப்பாய், ஜூலை 5

பாற்பண்ணையாளர்கள் தாம் உற்பத்திசெய்யும் பாலைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் பாலை வீதிகளில் வைத்து குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலையிலும் உள்ளனர். பால் ஒரு போஷாக்கு நிறைந்த உணவாக இருந்த போதிலும் யாழ் மாவட்டத்தில் அதனை அருந்துவோர் மிகக் குறைவு. பால் அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்துவதுடன் இலகுவாகவும் மலிவாகவும் அதனை மக்கள் பெற்றுக்கொள்ள ஏற்ற வழிகள் செய்யப்பட வேண்டும்,

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கால்நடை வைத்தியப்பிரிவு ஒன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய உதவி அரசாங்கஅதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இப்படிக் கூறினார்.

யாழ். கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளைத் தலைவர் திரு. ப. சுதர்சன் கூட்டத்துக்குத்தலைமைவகித்தார்.

திரு. மகாலிங்கம் மேலும் பேசியதாவது:

இப்பிரதேச மக்களுக்குப் பாலின் மகத்துவத்தை விளங்கவைத்துப் பாலை எல்லோரும் அருந்த வைப்பதில் இது போன்ற சங்கங்களின் உழைப்புக்கு சுகாதார சேவைப் பகுதியினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஊக்குவிப்புக்கேற்ப உற்பத்தியாளர்களும் — நுகர்வோரும் நன்மையடையாவிடில் எமது முயற்சிகள் தோல்வியில் முடியும்.

மேலதிக பால் வீண் விரயமாகாது அதனைப் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளைக் கண்டு பிடிக்கவேண்டும்.

சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்து பாற்கட்டிகள் செய்வதன் மூலம் பால் விரயமாவதை ஓரளவு தடுக்கலாம்.

— இப்படி அவர் கூறினார்.

திரு. ப. சுதர்சன், டாக்டர் தி. வர்ணகுலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர்சங்க சுன்னாகம் கிளையினர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக ஒவ்வொரு புதன்கிழமையும் யாழ் அரச கால்நடை வைத்தியர் டாக்டர் தி. வருணலிங்கம், உடுவில் உதவி அரச அதிபர் பணிமனைக்கு வந்து இலவச கால்நடை ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

கால்நடைகளுக்கான வைத்திய வசதிகளையும் இவர் மேற்கொள்வார். (இ-90)

# அரசியல் தீர்விற்கே இன்னும் முயலுகிறோம்

## கதிர்காமத்தில் ஜே ஆர். உரை

கொழும்பு, ஜூலை 5

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியை ஸ்ரீ லங்கா அரசு இன்னமும்கைவிடவில்லை.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இப்படிச் சொன்னார்.

கதிர்காமத்தில் கம் உதாவ கொண்டாட்டத்தில் பிரதம அதிதியாக அவர் கலந்து கொண்டார்.

அங்கு திரு. ஜெயவர்த்தன உரை நிகழ்த்தியபோதே மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் யுத்தம் நடக்கிறது. இந்த நேரத்தில் இது போன்ற கொண்டாட்டங்கள் அவசியமா என்று சிலர் கேட்கின்றனர்.

ஸ்ரீ லங்கா இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு நாடாக விளங்கி வருகின்றது.

எமது மக்களின் இந்த 2, 500 வருட கால வாழ்க்கையில்பல சவால்கள், ஆபத்துக்களை எதிர் நோக்கி உள்ளனர். ஆனால் அவர்கள் அவற்றை எதிர்த்துப் போராடி மீண்டு, நாகரிகமான மக்களாக வாழ்ந்து வருகிறார்கள். சவால்கள்வரும் போது அவர்கள் அவற்றுக்கு எதிராக எழுச்சி அடைந்ததே அதற்குக் காரணம்.

வருங் காலத்தில் வரக்கூடிய சவால்களையும் எதிர்கொள்வதற்காக அவர்கள் மீண்டும் எழுச்சி அடைவார்கள்.

அரசியல் தீர்வுகாணும் முயற்சியை எனது அரசு கைவிடவில்லை. தீவிரவாதிகள் தான் அரசியல் தீர்வு காணுவதை எதிர்த்து வருகின்றார்கள்.

இப்படி ஜனாதிபதி சொன்னார்,

பிரதமர் பிரேமதாஸாவும் பேசினார் (-எ-உ-எ)

# இரத்தினபுரத்தில்

## காணி உத்தரவுப் பத்திரம்

கிளிநொச்சி இரத்தினபுரம் கிராமத்தில் அத்துமீறிக் குடியேறி காணிக் கச்சேரி மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான காணி உத்தரவுப் பத்திரம் வழங்கும் வைபவம் எதிர்வரும் 7ஆம் திகதி இரத்தினபுரம் சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ்.முருகவேள் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் காணி அலுவலக அதிகாரிகள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

அன்றையதினம் காணி உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது ஆள் அடையாளக் கார்ட், பிரசாஉரிமை, உணவு முத்திரை, வரிப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டு போன்ற சகல தஸ்தாவேஜுக்களையும் எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-76)


## பிரயாண ஒழுங்குகள்

## ★ குவைத் ★

எம்மிடம் பாஸ்போட் கொடுத்தவர்கள் எல்லோரும் தொடர்பு கொள்ளவும்.

**குவைத் Harbourக்கு Agreement செய்தவர்கள் யாவரும் பிரயாணம் மேற்கொள்ள இருப்பதால் உடனே தொடர்பு கொள்ளவும்.**

LAND SURVEYORS முற்பணம் கட்டியவர்கள் மட்டும் வந்து சந்திக்கவும்.

**பின்வரும் பதவிகட்கும் சொற்ப இடமிருக்கின்றதால் விருப்பமுள்ளவர்கள் வரவும்.**

1. Draftsman — 3 இடங்கள் உள்ளன
2. Mechanics — 5 வருட அனுபவம்
3. Auto Electrician — 5 வருட அனுபவம்
4. Heavy Duty Drivers 5 வருட அனுபவம்
5. H. E. Operators 5 Years
6. Labourers
7. Steel Workers 5 Years

குவைத் நாட்டிற்கு Cleaning Labourer தேவையாக இருக்கிறது. உடன் வரவும்.

விபரங்கட்கு:

**V. P Balasubramaniam**
(V. P. BALA)
Kondavil West,
School Lane,
KONDAVIL.

**Head Office:**

**Construction & Development Company Ltd.**

37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.

Labour Licence No. 96


★ செய்திக்கொத்து ★

### முள்ளியவளை பிரசைகள் குழு உதவி

முள்ளியவளை, ஜூலை5

வடமராட்சிப் பகுதியிலிருந்து முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதியில் அகதிகளாகத் தங்கியிருப்பவர்களுக்கு முள்ளியவளைப் பிரசைகள் குழு அரிசி, மா, சீனி, தேயிலை ஆகிய உணவுப் பொருள்களை வழங்கியது. (இ-93)

### திருமலைபாதுகாப்பு குறித்து மாநாடு

திருகோணமலை, ஜூலை 5

வடமத்திய பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. எம். டி. ஏ. ராஜபக்ஸ திருகோணமலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அண்மையில் மாநாடு ஒன்றை நடத்தினர் (இ-150)

### சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம் இடம் மாறுகிறது

யாழ் பாணம், ஜூலை 5

குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவர்களுக்கான வகுப்புகள் நாளை திங்கள் முதல் (6 ஆம் திகதி) பாஷையூர் சென் அந்தனீஸ் மகளிர் பாடசாலையில் பி.ப. 12.30 முதல் 5.00 மணி வரை நடைபெறும்.

குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் இதனை அறிவித்துள்ளார். (இ-ள)

### கோழிக் குஞ்சுகளுக்கு நோய் தடுப்பு ஊசி

மானிப்பாய், ஜூலை5

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் வைத்தியப் பகுதியினரால் சுன்னாகத்தில் சுமார் 600 வரையான கோழிக் குஞ்சுகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டது.

கால்நடை வளர்ப்போர்சங்கசுன்னாககிளைத் தலைவர் திரு. பா. சுதர்சன், தனாதிகாரி திரு. மா. கனகசுந்தரம் ஆகியோர் இதற்கான ஒழுங்குகளையும் உதவிகளையும் செய்து கொடுத்தனர். (இ-90)

### வீடுகளைப் பார்க்க அனுமதியில்லை

காங்கேசன் துறை, ஜூலை 5

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளுக்குப் பொதுமக்கள் செல்வதற்கு கடந்த வியாழக்கிழமை அனுமதி வழங்கப்படவில்லை.

இதற்குமுன் இருதினங்களாக (செவ்வாய், புதன்) மேற்படி பகுதி மக்கள் தமது வீடுகளைச் சென்று பார்க்க இராணுவம் அனுமதியளித்திருந்தது.

இதனால் ஏராளமான மக்கள் அங்கு சென்று தமதுவீடுகளைப் பார்வையிட்டு அத்தியாவசிய பொருள்களை எடுத்து வந்தனர். (இ-68)

### துப்பாக்கி வேட்டு

காரைநகர் கடற்படை மற்றும் கடற்கோட்டையிலிருந்து [illegible] துப்பாக்கி வேட்டுகளும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (இ-73)

# மரம் ஏறும் தழும்பைக் கண்டு சீவல் தொழிலாளரை கைது செய்யும் ஒப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

இராணுவத் தேடுதல் நடவடிக்கைகளின் போது சீவல் தொழிலாளர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இதனால் சீவல் தொழிலாளர்கள் பெரிதும் அச்சமும் பீதியும் அடைந்துள்ளனர்.

சீவல் தொழில் செய்பவர்கள் மரங்களில் ஏறும்போது இரு கைகளிலும் மரம் தேய்த்துத் தழும்புகள் ஏற்பட்டு இருப்பது வழக்கம்.

இத் தழும்புகள் இராணுவத் தேடுதல் நடவடிக்கைகளின் போது இராணுவத்தினருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துவதால் சீவல் தொழிலாளர்களைக் கைது செய்கின்றனர்.

நூற்றுக்கணக்கான சீவல் தொழிலாளர்கள் வடமராட்சிப் பகுதியிலும் இதர பகுதிகளிலும் இதுவரை கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளதாக இலங்கைப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க.நடராசாவிடம் சீவல் தொழிலாளர் குடும்பங்கள் முறையிட்டுள்ளன. (இ)

# கிரனேட் வெடித்து சிப்பாய் மரணம்

## மங்கிபிரிட்ஜில் சம்பவம்

திருகோணமலை, ஜூலை5

கையில் வைத்து இருந்த கிரனேட் தற்செயலாக வெடித்ததில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

திருகோணமலை, மங்கிப்பிரிட்ஜ் இராணுவ முகாம் அருகில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இரண்டு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

எம். ஜி. எஸ். குமார (22 வயது) என்ற சிப்பாயே உயிரிழந்தவர்.

காயமடைந்த சிப்பாய்களான சந்திரரத்தின பண்டா, ரத்னசிறி ஆகியோர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ரோந்து நடவடிக்கை [illegible] சென்ற சமயமே இவ் விபத்து இடம்பெற்றது. (உ-எ-150)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சிப்பாய்களின் உதவியுடன்

# பொதுமக்களை கொள்ளையடிக்கும் கேடிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடமராட்சிப் பகுதியில் உள்ள தமிழ்க் கேடிகள் சிலர் பொதுமக்களைப் பயமுறுத்தி கொள்ளைகளில் ஈடுபடுகின்றனராம்.

இவர்கள் சிப்பாய்களுடன் சிநேகிதம் கொண்டு அவர்களின் அனுசரணையுடன் பொதுமக்களைக் கொள்ளையடிக்கின்றனர் என்று குற்றம் கூறப்படுகிறது.

பன்னைக்கட்டை, சந்தை மேற்கு ஒழுங்கை, ஆத்தியடிக் கொலனி ஆகிய இடங்களிலேயே இக் கொள்ளையர்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. (இ-ள)

### பிரசைகள் குழு விளக்குகிறது

கொழும்பு, ஜூலை 5

வவுனியாவில் தேர்தல்கள் நடத்துவது அமைதிக்குப் பங்கம் விளைவித்தில் தான் முடியும்.

வவுனியாப் பிரசைகள் குழு, இராணுவ அதிகாரி பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவையை நேரில் சந்தித்து எடுத்துக் கூறியது.

குழுத்தலைவர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம் தலைமையில் உறுப்பினர்கள் இராணுவ அதிகாரியைச் சந்தித்தனர். (உ-எ)

### இடைத்தேர்தல்களில்

# தமிழ் காங்கிரஸ் போட்டியிடாது

கொழும்பு, ஜூலை 5

வடக்கு, கிழக்குமாகாணங்களில் நடத்தப்படவுள்ள நாடாளுமன்ற இடைத் தேர்தல்களில் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடமாட்டாது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு அறிவித்திருக்கின்றார்.

இடைத்தேர்தல் குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே திரு.பொன்னம்பலம் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது;

இனப்பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்துள்ளது. தமிழரின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்பட்டு உள்ளன. தமிழருடைய மனோநிலை பாதிக்கப்பட்டு உள்ளது. அவர்களுடைய உயிருக்கு உத்தரவாதமில்லை.

பொருளாதாரம் நாசமாக்கப்பட்டுவிட்டது. உறவினர்களை இழந்து சோகத்தில் ஆழ்ந்து உள்ளனர்.

தங்கள் பிரதேசங்களை விட்டு அனாதைகளாக தமிழர் இடம்பெயர்ந்து விட்டனர்.

இந்த நிலையில் தேர்தல் கேலிக்கூத்து மட்டுமல்ல; கவலைக்கிடமான நடவடிக்கையும் ஆகும்.

இப்படி அறிக்கையில் திரு. குமார் பொன்னம்பலம் கூறியிருக்கின்றார். (இ-எ)

### அரசதரப்பு எம். பிமார் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 5

தென் இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல்களில் நியமனங்கள் வழங்கப்பட்ட விதம் குறித்து பல அரச எம். பிக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

- இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் பிரதமர் பிரேமதாஸாவின் ஆதரவாளர்களுக்கே முக்கிய இடங்கள் வழங்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என்று தெரிகின்றது.

கொழும்பு மாநகர சபை வேட்பாளர் பட்டியலில் முழுக்க முழுக்க பிரதமரின் ஆதரவாளர்களே இடம் பெற்றிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (உ-ஐ-எ)

### ● அபிஷேக படையல் பொருள் திருட்டு

காரைநகர், ஜூலை 5

கோயில் அபிஷேகத்துக்கெனத் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் திருடப்பட்டன.

இச்சம்பவம் காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலில் கடந்த வியாழன் இடம் பெற்றது.

நடேசர் அபிஷேகத்திற்கென குருக்களால் தயாரிக்கப்பட்ட பால், பழம், பொங்கல் பலகாரங்களே திருட்டுப் போயின.

குருக்கள் மீண்டும் அவற்றைச் செய்து அபிஷேகத்தை நடத்தினார். (இ-ள-73)

# உள்ளூர்உணவுவகையை உண்ண எம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும்

காங்கேசன்துறை, ஜூலை 5

நாம் மேல்நாட்டு உணவு வகைகளில் நாட்டம் கொள்ளாது கூடியளவு உள்ளூர் உணவு வகைகளையே உபயோகிக்க எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இணுவில் கிராம அபிவிருத்திச் சங்கம் ''உள்ளூர் உணவுப் பொருள்களின் பயன்பாடு'' குறித்து கருத்தரங்கும் பயிற்சி நெறியும் நடத்தியது.

இவற்றில் கலந்து கொண்டு தலைமைவகித்து உரையாற்றிய சங்கத் தலைவர் திரு. செ. இலகுநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வைபவத்தில் 25 பயிற்சியாளர்கள் பங்குபற்றி பயிற்சிபெற்றனர் யாழ். கிருஷிகபகுதி மனையியல் ஆசிரியை திருமதி.சரோஜினிதேவி சண்முகநாதன் பயிற்சியை நடத்தினார்.

மற்றும் இணுவில் சமாதான சபைச் செயலாளர் திரு.தி.புரந்தரதாசன், திருமதி ப. சிவரத்தினம், திருமதி. ப. ஆனந்தம் ஆகியோரும் உரையாற்றினர். (இ-68)

## மக்கள் முகம்

### சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கம்

வட்டுக்கோட்டை, ஜூலை 5

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கத்தின் 15 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு. ஆ. இராசையா, பொதுச் செயலாளர்: திரு. செ. குமாரசிங்கம், உபதலைவர்: திரு.ஞா எட்வேட், உபசெயலாளர்: திரு.க. தங்கராசா, பொருளாளர்; திரு. ச. நல்லையா, உபபொருளாளர்: திரு. க. இராசரத்தினம், கல்வித்துறைத் தலைவர்: திரு. அ. நடராசா, கலைத்துறைத் தலைவர்: திரு. நா. கனகசபை, விளையாட்டுத் துறைத் தலைவர் திரு.அ ஆனந்தராசா.

செயற்குழு உறுப்பினர்கள்: திரு. வ. வேலையா, திரு. பி. அ. துரைசிங்கம், திரு. நா. கதிரவேலு, திரு. செ. பாலச்சந்திரன், திரு. வை. செந்திநாதன், திரு. பொன். வேல்முருகு. திரு. க. கதிரேசு, திரு. பா. பசுபதி. (இ-161)

### புறக்கோட்டை குண்டுவெடிப்பு:

# 11 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

கொழும்பு, ஜூலை 5

புறக்கோட்டை பஸ் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் பதினொரு பேர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுவிட்டன. ஆனால் அவற்றின் புகைப்படங்கள் கொழும்பு புறக்கோட்டைப் பொலீஸில் வைக்கப்பட்டுள்ளன.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து காணாமற் போனவர்களின் உறவினர்கள் இன்னும் பொலீஸில் முறைப்பாடுகளைச் செய்த வண்ணமே உள்ளனர்.

அடையாளங் காணப்படாதவர்களின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதில் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாக புனர்வாழ்வு அமைச்சு அதிகாரி தெரிவித்தார். (இ-எ)


## Medical Laboratory TECHNOLOGIST

Vacancy exists for a full time Medical Laboratory Technologist. Salary not less than Rs. 1000/- per month negotiable Bio Data to:

**DIRECTOR,**
**Maternity & Nursing Home**
**Market Place, Chankanai.**

## உதய சங்கற்பம்

அன்பை நாடுங்கள்; ஞான வரங்களை யும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்க தரிசன வரத்தை விரும்புங்கள்.

— பைபிள்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
05.7.1987 த.பெ.இல: - 23

## இந்தியா + சோவியத் ஸ்ரீலங்கா + அமெரிக்கா

இந்தியாவைப் பலவீனப்படுத்தப் பல வெளிநாட்டு அரசியல் சக்திகள் உள்ளே இருந்தும் வெளியே இருந்தும் தீவிரமாகச் செயற்படுகின்றன,

இவ்வாறு சோவியத் தலைவர் திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ் ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறார்.

அவரது கருத்து இந்தியா சம்பந்தப்பட்டது என்று கருதி விட்டுவிடக்கூடியது அல்ல. தெற்காசியப் பிராந்திய'த்தில் உள்ளவர்களால் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இந்தியாவைச் சூழ உள்ள அயல்நாடுகளுடனான உறவு நிலை மிகவும் நெருக்கடியாக இருப்பதைச் சுலபமாக அவதானிக்க முடிகின்றது.

பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் எல்லைப் பிரச்சினைகள் உண்டு. பாகிஸ்தானும், சீனாவும் அதனைச் சாட்டாக வைத்து இந்தியாவோடு முட்டி மோதக் கங்கணம் கட்டி நிற்கின்றன.

அவை இரண்டு கும் அமெரிக்கப் பக்கத் துணை இருப்பது வெளிப்படையானது. பாகிஸ்தானும் சீனாவும் கொடுக்கும் நெருக்குதல்களுக்குப் பலம் சேர்ப்பதற்காக, பங்களாதேஷ், நேபாளம் ஆகியனவும் இந்தியாவுக்கு எதிராகத் தூண்டி விடப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக அந்தத் தூண்டுதல் ஏகாதிபத்தியப் பக்கத்தால் இருந்தே வந்திருக்கும்.

ஸ்ரீலங்காவும் இந்திய எதிர்ப்பு அணியில் சேர்ந்துவிட்டது சொல்லாமலே விளங்கும். அமெரிக்கத் தூண்டுதலே அதற்குப் பின்னணி என்பதும் வெளிப்படை,

இந்தியாவைப் பலவீனப்படுத்த வெளிநாட்டுச் சக்திகள் தீவிரமாகச் செயற்படுவதாக திரு. கோர்பச்சேவ் குறிப்பிட்டது அச்சொட்டானது என்பதை இவற்றின் மூலம் உணர முடிகிறதல்லவா? அந்த வெளிநாட்டுச் சக்தி அமெரிக்காவே என்பதை அவர் மறைமுகமாக உணர்த்தியுள்ளார் என்பதையும் எவரும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

அமெரிக்கா இவ்வாறு இந்தியாவைப் பலவீனப்படுத்த முனைவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. இந்தியாவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் இடையில் உள்ள அன்னியோன்னியமான நட்பு முதலாவது காரணம். இந்து சமுத்திரப்பகுதியில் அமெரிக்கா தனது ஆதிக்கத்தைச் செலுத்த விரும்புவது இரண்டாவது காரணம்.

இந்து சமுத்திரப் பகுதியை சமாதானப் பிரதேசமாக்க வேண்டும் என்று அப்பகுதியில் உள்ள அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் நாடுகள் ஆசைப்படுவது இயற்கை. அந்த ஆசையை நிறைவேறுமற் செய்து அப்பகுதியைக் குழப்பமும் கலகமும் நிறைந்த பகுதியாக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் சதி எண்ணம்.

இந்து சமுத்திரப் பகுதியைக் குழப்பம் நிறைந்த பிரதேசமாக்கினால் தனது ஆயுத விற்பனைக்கு புதிய சந்தையை ஏற்படுத்தி, வளர்த்து, விஸ்தரிக்கலாம் என்ற வர்த்தக நோக்கமும் அமெரிக்காவுக்கு உண்டு. அது மட்டுமன்றி மூன்றும் உலக நாடுகளை உள்நாட்டு. வெளிநாட்டுச் சண்டையில் ஈடுபடுத்தி அவற்றைப் பொருளாதாரத் துறையில் மேலும் நலிவடையச் செய்து அவை தன்னிடமே உதவிக்குத் தேடி வரச் செய்யும் மிகஆழமானசதி எண்ணமும் அமெரிக்காவுக்கு உண்டு.

அப்படிச் செய்வதனால், தாமோ பணபலம் மிக்க வல்லரசாகத் தொடர்ந்து திகழ்வதற்கான திட்டம் இது. மூன்றும் உலகநாடுகளுக்கு கருணை புரியும் கொடை வள்ளலாகக் காட்டிக் கொண்டு, தனது செல்வாக்கையும் அதன்மூலம் மறைமுக ஆதிக்கத்தையும் செலுத்த வாய்ப்பு உண்டாகும் என்பது அமெரிக்காவின் நோக்கம்.

இதனைப் புரிந்து கொள்ளாமல் சில நாடுகளும், புரிந்துகொண்டு சில நாடுகளும் தாம் யுகாந்திர யுகாந்திரமாகப் பின்னடைந்து நிற்கப் போட்டி போடுகின்றன. நாடுகள் என்று சொல்வதை விட அவற்றின் தலைவர்கள் தமது சுயநலத்தைக் கருதி அபாயத்தை அறிந்தும் அந்தப்பக்கம் சார்ந்து நிற்கிறார்கள் என்றே சொல்லலாம்.

இந்தியா ரஷ்யாவோடு நட்புறவு கொண்டுள்ளதாலும் தான் பின்தங்கிய நாடாக இராமல் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற உண்மையான உத்வேகம் கொண்டிருப்பதாலும் அதனைக் கல்லெறியும் இலக்காக வைத்து ஏனைய நாடுகளுக்கு ஆசைகாட்டி மோசம் செய்ய முனைந்து நிற்கிறது அமெரிக்கா!

இந்த வலையில் ஸ்ரீலங்காவும் சரியாகச் சிக்கிக்கொண்டு, தன்னைத் தானே சர்வதேச யுத்த களமாக்கப் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகிறது! தனக்குத் தானே அழிவு தேடத் தன்னைத் 'தியாகம்' செய்ய முன்னிற்கிறது. ஸ்ரீலங்காவின் — தென்னிலங்கையின்—கொழும்பு அரசின்—இந்தியஎதிர்ப்பு வேகம் அதற்கான பச்சை விளக்கே. தமிழர்கள் அந்த வழி செல்லக் கனவிலும் நினைக்கக் கூடாது.

வளைகுடாவில் அமெ: கடற்படை

# சர்வதேச அமைதிக்கு பயமுறுத்தல்

மாஸ்கோ, ஜூலை 4

வளைகுடாவில் அமெரிக்கக் கடற்படையின் பலத்தை அதிகரிப்பது சர்வதேச அமைதிக்கு விடுக்கப்படும் பயமுறுத்தல் ஆகும்.

இப்படி சோவியத் யூனியன் எச்சரித்து உள்ளது.

வளைகுடா நெருக்கடி தீவிரமடைந்து வரும் இத் தருணத்தில் சோவியத் அரசு இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

வளைகுடா பிராந்தியத்திற்கு வெளியே உள்ள நாடுகள் தங்கள் யுத்தக்கப்பல்களை வளைகுடாவுக்கு அனுப்பக் கூடாது.

குவைத் எண்ணெய்க்கப்பல்களுக்கு பாதுகாப்பளிப்பது என்ற போர்வையில் அமெரிக்கா யுத்தக் கப்பல்களை வளைகுடாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் மூலம் இராணுவ, அரசியல் ஏகாதிபத்தியத்தை வளைகுடாவில் நிலைநாட்டும் எண்ணத்தையே அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

பீரங்கிப் படகு ராஜதந்திரக் கொள்கையினால் வளைகுடா நெருக்கடி மோசமடையும் என்பதை அமெரிக்கா உணர வேண்டும்—

இப்படி சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது. (இ-எ)

## ரஷ்யாவில் இந்திரா சிலை

மாஸ்கோ, ஜூலை 4

மாஸ்கோ பல்கலைக் கழகச் சதுக்கத்தில் இந்திரா காந்தியின் வெண்கலச் சிலையை பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் சோவியத் தலைவர் கோர்பச்சேவ், '' மனித குல வளர்ச்சிக்காக தன்னைத் தியாகம் செய்தவர் இந்திரா காந்தி '' என்று பாராட்டினார்.

பிரதமர் ராஜீவ் காந்தி பேசுகையில், '' உலகத்தையே தாயகமாகக் கருதியவர் அன்னை இந்திரா காந்தி ''- என்று சொன்னார். (உ-எ)

## ராஜீவ் டில்லி திரும்பினார்

புதுடில்லி, ஜூலை 4

இரண்டுநாள் சோவியத் விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி புதுடில்லி திரும்பினார்.

# பெட்டிக்குள் பிணமான 18 பேர்!

வாஷிங்டன், ஜூலை 4

மெக்ஸிக்கோவில் இருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவினுள் நுழைய முயன்ற 18 பேர் பிணமாக மீட்கப்பட்டனர்.

பெட்டி ஒன்றுக்குள் மூடப்பட்ட நிலையில் கடத்தல் கோஷ்டியினர் இவர்களைக் கடத்தி டெக்ஸாஸ் மாநிலத்துக்குக் கொண்டுவர முயற்சித்தனர்.

மெக்ஸிக்கோ எல்லைப்பகுதியில் வைத்து பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களினால் இவர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டது. அப்போது பெட்டி உடைத்துப் பார்க்கப்பட்டது.

உள்ளே இருந்த பதினெட்டுப் பேர் பிணமாகக் கிடந்தனர். ஒருவர் மட்டுமே உயிர் தப்பினார்.

மூச்சுத் திணறியதால் இச்சம்பவம் இடம் பெற்றதாம்.

மெக்ஸிக்கோவில் இருந்து தொழில் வாய்ப்புத்தேடிஅமெரிக்காவில்சட்டவிரோதமாக நுழைபவர்கள் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

1986ஆம் ஆண்டில் மட்டும் 15 லட்சம் பேர் மெக்ஸிக்கோ ஊடாக அமெரிக்காவுக்குள் நுழைந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது. (இ-எ)

## வெளி உலகில்

### 38 வருடகால இராணுவ சட்டம் நீக்கப்படும்

தைவானில் கடந்த 38 ஆண்டுகளாக அமுல் நடத்தப்பட்டு வரும் இராணுவச்சட்டம்விரைவில் விலக்கிக்கொள்ளப் படவுள்ளது.

தைவான்நாட்டு அரசின் அமைச்சரவை நேற்றுக்கூடி இம் முடிவை எடுத்தது.

இது சம்பந்தமான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டவுடன் இராணுவச் சட்டம் நீக்கப்பட்டு விடும். (இ-எ)

### சோவியத் யூனியன் - இந்தியா விஞ்ஞான தொழில் நுட்ப ஒப்பந்தம்

மாஸ்கோ, ஜூலை 4

விஞ்ஞான—தொழில் நுட்ப உடன்படிக்கை ஒன்றை இந்தியாவும் சோவியத் யூனியனும் நேற்று செய்து கொண்டன.

உடன்படிக்கையில் பிரதமர் காந்தியும் சோவியத் தலைவர் கோர்பச்சேவும் கைச்சாத்திட்டனர்.

விண்வெளி ஆராய்ச்சி, கம்பியூட்டர் துறை மற்றும் ஆறு துறைகள் குறித்து உடன்படிக்கை அமைந்துள்ளது.

நிபுணர்களை பரிமாறிக் கெள்ளும் ஏற்பாடும் உடன்படிக்கையில் உள்ளது. (இ-எ)

## ✶ யுத்த முனையில் பெண்களும்

ஒட்டாவா, ஜூலை 4

கனடா ஆயுதப்படைகளில் பணியாற்றும் பெண்கள் இனி யுத்த முனைகளுக்குச் சென்று போரிடலாம். இதற்கு இதுவரை விதிக்கப்பட்டு இருந்த தடைகள் நீக்கப்படுகின்றன.

கனடா பாதுகாப்பு அமைச்சர் இதனை நேற்று அறிவித்தார்.

முதலில் விமானப் படையைச் சேர்ந்த பெண்கள் சண்டை விமானங்களை, ஹெலிக்கொப்டர்களை ஓட்ட அனுமதிக்கப்படுவர்.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் கடற்படையில் பணிபுரியும் பெண்களும் கடற்படை யுத்தக் கப்பல்களில் சேவை செய்ய அனுமதிக்கப்படுவர். (இ-எ)

## பஸ் விபத்தில் 37 பேர் பலி!

மாட்ரிட், ஜூலை 4

ஸ்பெயினில் நடந்த பஸ் விபத்து ஒன்றில் 37 பயணிகள் உயிரிழந்தனர்.

வீதியில் சென்றுகொண்டிருந்த பஸ் வழுக்கிச் சென்று நூற்றி ஐம்பது மீட்டர் ஆழத்தில் விழ்ந்து நொருங்கியது.

மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்றன. (இ-எ)

## விசித்திரம்

பூரளியாரே? வாரும்! ஓம். இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. சந்தைக்குப் போய்ச் சாமான் சக்கட்டை எல்லாம் வாங்கிக் குடுத்திட்டுத்தான் வாறீர் போலை!

எப்பிடிச் சந்தை நிலை! மரக்கறியள் உச்சத்துக்கு நிக்குதோ? சனம் மனந்தரிச்சு ஒண்டையும் செய்ய முடியாமல் சங்கடப்படுகுதுகள்.

'ஐலண்ட் பிறைட்டும்' 'பொறுக்கா'வும் வந்த பிறகு வானத்திலை இராமண்ணுமாரின்ரை ஓட்டம் கொஞ்சம் குறைஞ்சிருக்கு. எண்டாலும் சனத்துக்கு அடுத்த 'ஒப்பறேஷன் லிபறேஷன்' நடக்குமோ எண்டு ஒரு பயம்!

மூண்டாவது 'ஒப்பறேஷன் லிபறேஷனை' தடுக்கிறதுக்காகத் தான் நிவாரணக் கப்பல்கள் வந்ததாய் அரசியல் வட்டாரங்களிலை பேசிக் சொள்ளுகினம்.

இனி அப்பிடி ஒரு நிலைமை ஏற்படாது எண்ட மாதிரி இஞ்சை நிக்கிற இந்தியப் பிரதிநிதியளும் தெம்பு அளிக்கினம்.

எண்டாலும் சனம் பயப்பட்டுக் கொண்டு தான் இருக்கு. இந்தியா வாறத்துக்கு இடையிலை இஞ்சை அரைவாசிப் பேரை முடிச்சுப் போடுவாங்கள் எண்டு சொல்லிப் பயப்பிடுகுதுகள்.

இதிலை எது நடக்கும் நடக்காது எண்டு சரியாய்ச் சொல்லக்கூடிய நிலையிலை ஒருத்தரும் இல்லை. ஆனால் சிலபேர் எல்லாம் அறிஞ்ச வித்துவான்கள் மாதிரி, மெத்தப்படிச்ச மேதாவியள் மாதிரி, இல்லாதது பொல்லாதது எல்லாத்தையும் கதையாக்கி விட்டுசனத்துக்குக் குழப்பத்தை உண்டாக்குகினம். அப்பிடிப் பொய்களைச் சேர்த்து வதந்தியாக்கி விடுகிறதாலை சில பேருக்கு ஒரு இன்பம்!

மூண்டாவது ஒப்பறேஷனை நடத்தித் தமிழரை மடக்கித்தாங்கள் நினைச்சதைக் குடுத்து விடுவம் எண்டதிலை அரசாங்கம் சரியான அக்கறையாய் இருக்காம். அண்டைக்கு நான் சொன்னது போலை அரசாங்கத் தலைவர்களை விட ஆயுதப் படை அதிகாரிகள் கூடிய அக்கறையாம்!

எண்டாலும் உவை நினைச்சதைத் தமிழருக்குப் பிச்சை போடுறத்துக்கு இந்தியா விடமாட்டுது எண்டது இப்ப நல்லாய்த் தெரிஞ்சு போச்சு.

'டிசம்பர் 19' எண்ட மாயமான் எல்லாம் இனிச் சரிவராது. அதிலிருந்தும் உயரச் சென்று போக வேணும் எண்டு தான் இந்தியா விரும்புது!

இந்தியாவின் மத்தியஸ்தத்தை தொடந்து ஏற்கிறதா இல்லையா எண்ட பிரச்சினை இப்ப அரசாங்கத்துக்குள்ளை உண்டாகி இருக்குதாம். மத்தியஸ்தத்தை ஏற்று குடுக்கக் கூடியதைக் குடுத்து நிலைமையை ஒரு மாதிரி அனுசரிச்சுப் போக வேணும் எண்ட ஒரு கோஷ்டியும் உண்டாம்.

எங்கடை ஆதிபத்தியத்துக்கும், இறைமைக்கும் சவால் விடுமாப் போலை விமானத்திலை கொண்டு வந்து யாழ்ப்பாணத்திலை உணவுப் பொருள்களைப் போட்ட இந்தியாவிட்டை எப்பிடி நேர்மையான மத்தியஸ்தத்தை எதிர் பார்ப்பது? அதுகின்ரை மத்தியஸ்தத்தை எப்பிடி ஏற்க முடியும்? எண்டு அடுத்த கோஷ்டி ஒண்டு இந்தியாவுக்கு எதிராய்க் கொடுக்குக் கட்டுதாம்.

ஆனால் இந்தியா உதுகளைச் சட்டைசெய்யாமல், காரியத்திலை வெகு

(4-ஆம் பக்கம் பார்க்க)

பூஸா முகாம் சித்திரவதைகள்:

# இரவில் இயற்கைக் கடன் கழிக்க வெளியே செல்ல முடியாது

## பிளாஸ்டிக் பைகளே வழங்கப்பட்டன

**3 அளவுக்கு அதிகமானவர்களை முகாமில் தடுத்து வைப்பது, சுகாதாரம் அற்றநிலை, அது தொடர்பாக ஏற்படும் நோய்கள்:**

பூஸா இராணுவ முகாமில் 14 வார்ட்டுகள் உள்ளன என்று கூறப்படுகின்றது. ஒவ்வொரு வார்ட்டும் 70 அடி × 20 அடி விஸ்தீரணமானது.

ஒரு வார்ட்டில் 125 முதல் ஆகக் கூடியது 150 கைதிகளை வைத்து இருக்கலாம்.

உண்மையில் ஒவ்வொரு வார்ட்டிலும் 185 முதல் 225 பேர் வரை தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

ஒவ்வொரு வார்ட்டுக்கும் 70 அடி நீளத்தில் 4 அடி அகலத்தில் விறுந்தை ஒன்று உண்டு.

பகல்வேளைகளில்அந்த விறுந்தையைப் பாவிக்கவே தடுப்புக் காவல் கைதிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

வார்ட்டுகளுடன் இணைக்கப்பட்டதாக மலசலகூட வசதிகள் இல்லை. மாலை 6 மணி முதல் மறு நாள் காலை 6 மணி வரை கைதிகள் வார்ட்டுகளினுள்ளே பூட்டியே வைக்கப்படுகின்றனர்.

> பூஸா இராணுவ முகாமில்இடம்பெறும் சித்திரவதை, துன்புறுத்தல் மற்றும் சீர்கேடுகள் பற்றி சர்வதேச மன்னிப்புச்சபை ஆறுபக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
>
> அதன் ஐந்தாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.

அளவுக்கு அதிகமாக வார்ட்டுகளில் கைதிகள் வைக்கப்படுவதுதொற்று நோய் பரவுவதற்கும் மற்றும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கும் ஊக்கமளிப்பதாக அமைகின்றது.

தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒருவர் கூறுகின்றார்.

**பிளாஸ்டிக் பைகள்**

1986 ஜூனில் இருந்து ஆண் கைதிகள் இயற்கைக் கடன் கழிப்பதற்காக இரவு நேரங்களில் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

இயற்கை உபாதையை நிறைவேற்ற பிளாஸ்டிக் போத்தல்கள், பிளாஸ்டிக் பைகளையே அவர்கள் உபயோகித்து வருகின்றனர்.

காலையில் பிளாஸ்டிக் போத்தல்கள் பைகளுடன் வெளியே ஓடுவர். மலசலகூடக் குழிக்கு மேல் உள்ள காங்கிரீட் தட்டை அகற்றிவிட்டு அவற்றை உள்ளே வீசுவர்.

அந்தக் குழிகள்நிறைந்தவுடன் அவற்றை வாளிகளை உபயோகித்து துப்புரவு செய்யும்படி அதிகாரிகள் கைதிகளையே பணிப்பர்.

அதன்பின்னர் அழுக்கு நீரை அப்புறப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட வாளிசளைக் கைதிகளே துப்புரவு செய்ய வேண்டும். அதன் பின்னர் குளிக்க அனுமதிக்கப்படுவர்.

அழுக்கு நீரை அப்புறப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட வாளிகளில் கொண்டு போகும் தண்ணீரையே குடிக்கவும் கைதிகள் பயன்படுத்த வேண்டியுள்ளது.

ஊட்டச்சத்துக்கள் சமமாக உள்ள உணவு வழங்கப்படாமை, போதுமான உணவு வழங்கப்படாமை, ஒழுங்கான குளிப்பு இன்மை— இவை காரணமாக தோல் வியாதிகள் கைதிகளுக்கு ஏற்படுகின்றன.

போதுமான உணவு இல்லாத காரணத்தினால்

(4ஆம் பக்கம் பார்க்க)



## பொய்யாமொழி

குறள்:

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

பொருள் :

தக்க இடத்தை அறிந்து பொருந்திய
[illegible]
அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை இழந்து விடுவார்.

## சுமப்போம் வாரீர்!

'ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்'(கலா 6:12)

ஒருமுறை சாது சுந்தர் சிங் இமயமலையயடுத்த திபெத்தின் மலைச் சரிவிலிருந்து தன் நண்பனுடன் வேகமாகக் கீழே

ஞானக்கதிர்

இறங்கிக் கொண்டிருந்தார். அது ஒரு மாலை நேரம். பனிக் கட்டிகள் மிக அதிகமாகக்கொட்டி இரத்தத்தை உறைய வைப்பதுபோல் விழுந்து கொண்டிருந்தது. சூரியன் அஸ்தமிக்கும் முன் கீழேயுள்ள கிராமத்தைக் கிட்டிச் சேர்ந்து அடுப்பை மூட்டி குளிர் காய்ந்தாலொழிய அவர்கள் பிழைக்கமுடியாது.

வரும் வழியில் ஒரு மனிதன் அரை உயிராய் பனிக்கட்டியின் மத்தியிலிருப்பதை சாது கண்டார். அவனுக்கு உயிரிருந்தபடியால் அவனை எப்படியாவது பாதுகாக்கத் திட்டமிட்டார். ஆனால் கூடவந்த நண்பனோ சாதுவைப் பார்த்து 'நீர் ஏன் அவனைத் தூக்கிக் கொண்டிருக்கிறீர். நாம் உயிர் பிழைப்பதே கஷ்டம். இதன் மத்தியில் இவனை வேறு சுமக்க வேண்டுமா? நீர் வேண்டுமானால் அவனைச் சுமந்துகொண்டு வாரும். நான் போகிறேன்'என்று போய்விட்டான்.

ஆனால் சாது மிகவும் சஷ்டத்தோடுகூட அவனைத் தனது தோள்களின்மீது தூக்கிக் கொண்டு நடந்தார்.



இதனால் ஒருவர் சரீரம் இன்னொரு சரீரத்தின் மேல் தேயுண்டு சூடு ஏறவே மேலிருந்தவனுக்கு சுய நினைவு, பெலன் வந்தது. அவன் சாது சுந்தர்சிங்கை கொஞ்ச

( 4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. C. M. A. Stage I Weekends

Economics — Mr. S Kathirgamanathan
Business Law — Mr. Eugene Mariampillai
Accounting — Mr S P Sivapathasundaram
Quantitative Method — Popular Varsity Lecturer

Commencement 4-7-87

**Cantabia Institute**

(Shoot of Oxonia Colombo)
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி ரோட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA



# உதயன்

05-07-1987 ஞாயிற்றுக்கிழமை



LONDON EXAMS

I. D. P. M. — Parts I & II
A. A. T. — All Stages
I. B. — all stages
Week end Classes
Commencement 4-7-87

**Cantabia Institute**

(Shoot of Oxonia, Colombo)
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி ரோட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA.


# வடமராட்சி அகதிகள் மன்னரிலும் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடமராட்சி அசம்பாவிதங்களைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டைச் சேர்ந்த 300 அகதிக் குடும்பங்கள் மன்னருக்கு இடம் பெயர்ந்துள்ளன.

இவர்கள் மன்னரில் உள்ள தனிப்பட்டவர்களின் வீடுகளிலும், திருக்கேதீஸ்வர ஆலயத்திலும் தங்கியுள்ளனர் என்று மன்னார் துயர் துடைப்புச் சங்கச் செயலாளர் திரு. கின்னியார் பீற்றர் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட வீடுகளில் தங்கியுள்ள 150 குடும்பங்களுக்கு மன்னார் மெதடிஸ்த தேவாலயத்தில் வைத்து பங்கீட்டு நிவாரணப் பொருள்களை துயர் துடைப்புச் சங்கத்தினர் வழங்கியுள்ளனர்.

இதேபோன்று திருக்கேதீஸ்வரம், விடத்தல் தீவு, இலுப்பைக்கடவை போன்ற பகுதிகளில் தங்கியுள்ள அகதிகளுக்கும் பங்கீட்டு உணவுப் பொருள்கள்வழங்கப்பட்டுள்ளன. (இ-ள)

## இந்தியஉணவு பொருள் விநியோகம்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புங்கங்குளம் இல. 98 இல் உள்ள அகதி முகாம், துரையப்பா மகாவித்தியாலய முகாம் ஆகியவற்றிலுள்ள அகதிகளுக்கு நேற்று இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்திய — இலங்கை— யாழ்ப்பாண செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் உணவு விநியோகத்தை மேற்பார்வையிட்டனர்.

யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. மாணிக்கவாசகர் இதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார். (இ-ள)


மீண்டும்வகுப்புக்கள் ஆரம்பம் — 6-7-87

யாழ் நகரில்

**டிப்புளோமா மனையியல்**

வகுப்புகளுக்கு தலைசிறந்த நிறுவனம்

**Ladies' Academy**

(Registered)
Victoria Road, (Near Subhas Tourist Hotel)
JAFFNA

புதிய வகுப்புகளுக்கான மாணவிகளும் ஏற்றுக்கொள்ளப்படுவர். (1261)



பிரதேச அபிவிருத்தி அமைச்சு

**விபுலானந்தர் அடிகள் இசை நடனக்கல்லூரி**

இராமகிருஷ்ணபுரம் - மட்டக்களப்பு

மட்டக்களப்பு விபுலானந்தர் அடிகள் இசை நடனக் கல்லூரியில் இசைக் கலைமாமணி/நாட்டியக் கலைமாமணி நான்காண்டு நெறியில் பயிலுவதற்கு மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அழைப்பாகின்றன.

**மாணவர் அனுமதிக்கான விதிகள்:—**

**(1) பாடநெறிகள்:—**

கீழ்க்குறிக்கப்படும் நான்காண்டுகாலப் பாடநெறிகள் நடைபெறும்.

1. வாய்ப்பாட்டு
2. வயலின்
3. வீணை
4. மிருதங்கம்
5. பரதநாட்டியம்
6. புல்லாங்குழல்.

மாணவர் ஒருவர் மேலே நிரல்படுத்தியுள்ள துறைகளில் ஒன்றையும் துணைப்பாடமாக மற்றொன்றையும் தெரிவுசெய்யவேண்டும். வாய்ப்பாட்டுத் தவிர்ந்த ஏனைய பாடங்களைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுப்பவர் வாய்ப்பாட்டினையே துணைப்பாடமாகக் கொள்ளல்வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியாது.

**(2) மாணவர் தெரிவு:—**

செய்முறைத் தேர்வு, எழுத்துத் தேர்வு ஆகியவற்றின்மூலம் மாணவர் அனுமதிக்கு தெரிவு ஆவார். தேர்வு கல்லூரியிலேயே நடைபெறும். தேர்வில் அனுமதி கிடைத்த பின்னர் தெரிவுசெய்யப்பட்ட துறையில் இருந்து மாற்றம் செய்ய முடியாது.

**(3) தகைமைகள்:—**

அ. ஒரே தடவையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தேர்வில் தமிழ்மொழி, கணிதம், சங்கீதம்/நாட்டியம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் ஒரேதடவையில் தமிழ்மொழி, கணிதம், சங்கீதம்/நாட்டியம் ஆகியவற்றை உள்ளடக்கிய எட்டுப் பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

சங்கீதம், நடனம் க.பொ.த பரீட்சையில் சித்தியடையாதவர்கள் வட இலங்கைச் சங்கீதசபைப் பரீட்சையில் மூன்றும் ஆண்டு சித்தியடைந்திருத்தல் அவசியமானது.

ஆ. வயது:—

விண்ணப்பதாரி 1987-08-31 அன்று 15 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட வயதினையுடைய இலங்கைக் குடிமகன்/குடிமகள் ஆதல் வேண்டும்.

**(4) அ. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:—**

முதல்வர்,
விபுலானந்தர் அடிகள் இசை நடனக் கல்லூரி,
கல்லடி,
மட்டக்களப்பு.

**ஆ. விண்ணப்பங்களை அனுப்பும் அஞ்சல் உறையில் இடதுபுற மேற்பக்கத்தில்**

''இசைக் கலைமாமணி''/''நாட்டியக் கலைமாமணி'' நெறிக்கு விண்ணப்பம் என்ற சொற்கள் பொறித்திருத்தல் வேண்டும்.

**இ. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதிநாள்**

1987 ஒகஸ்ட் 31ஆம் நாள்.

விண்ணப்பப்படிவங்களை விபுலானந்தர் இசைநடனக் கல்லூரி அலுவலகத்தில் ஒன்றுக்கு ரூபா 5/- செலுத்தி தபால் மூலமாகவோ, நேர்முகமாகவோ பெற்றுக்கொள்ளலாம். தனிப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ம. இராசநாயகம்,
தமிழலுவற் பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு.


## நயினை நாகபூஷணி உற்சவம்
# அடையாளக் கார்ட் கொண்டுவரும்படி ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 5

தற்போது நடைபெற்றுவரும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவங்களில் கலந்துகொள்ள வரும் வெளியூர் அடியார்கள் தம்முடன் அடையாளக் கார்ட்டுகளைக் கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. ரி. குலசேகரம் கேட்டுள்ளார்.

ஆலய வருடாந்த மஹோற்சவம் சென்ற 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

8 ஆம் திகதி புதன் கிழமை சப்பறமும்,9ஆம் திகதி தேரும், 10 ஆம் திகதி தீர்த்தமும், 11ஆம் திகதி தெற்போற்சவமும் நடைபெறும்.

பக்தர்களின் நலன் கருதி நயினாதீவு குறிகாட்டுவான் படகுச் சேவைக்கு விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நயினாதீவுத் துறையிலிருந்து தினமும் காலை 7 மணி, காலை 8 மணி, காலை 10 மணி, மாலை 2-30 மணி ஆகிய நேரங்களிலும், குறிகாட்டுவான் துறையிலிருந்து காலை 9-30 மணி, முற்பகல் 11 மணி, பிற்பகல் 2 மணி, மாலை 4 மணி ஆகிய நேரங்களிலும் படகுகள் புறப்படும்.

இவ்வாறு கோவில் அறங்காவலர் சபைத் தலைவர் தெரிவித்தார். (இ-ள)

# சோவியத் அணியில் இந்தியா இணைந்து விடவில்லை
## ஆனால் நட்பு உறுதியானது என்கிறார் ராஜீவ் காந்தி

புதுடில்லி, ஜூலை 5

சோவியத் வல்லரசு அணியில் இந்தியா இணைந்துவிடவில்லை. ஆனால் இரு நாடுகளுக்கு இடையிலான நட்பு உறுதியானது.

பிரதமர் ராஜீவ் காந்தி இப்படிச் சொன்னார்.

சோவியத் விஜயத்தை முடித்துக்கொண்டு பிரதமர் காந்தி நேற்றுக் காலை புதுடில்லி விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

அதன் பின்னர் செய்தியாளர் மத்தியில் பிரதமர் ராஜீவ் பேசினார்.

அஹிம்சை, ஆயுதக் குறைப்பு ஆகிய அடிப்படையிலானது இந்திய-சோவியத் நட்புறவு.

புதுடில்லி உடன்படிக்கையில் கூறப்பட்ட நோக்கங்களை வலியுறுத்துவதாகவே இரு நாடுகளின் நட்புறவும் அமைந்துள்ளது.

சோவியத் தலைவருடன் இந்திய-சீன எல்லைத் தகராறு குறித்துப் பேசினேன். அவர் எமது நிலையை உணர்ந்து கொண்டார்.

ஹரியானா தோல்வி பற்றி செய்தியாளர் கேட்டதற்கு பிரதமர் காந்தி சொன்னதாவது;

ஹரியானா தோல்வியை வைத்து நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தும்படி கோருகின்றார்கள்.

மத்திய, மாநிலங்களில் இடைத் தேர்தல்களில் ஏற்படும் தோல்விகளை வைத்து நாடாளுமன்றத் தேர்தலை மீண்டும் நடத்தும்படி கோருவதற்கு முடியாது —

இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (இ-எ)

### சுமப்போம். .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தாரம் சுமந்தான். இருவரும் பிழைத்துக் கொண்டார்கள்.

ஆனால் வரும் வழியில் தனியாக ஓடிவந்த சாதுவின் நண்பனே பனித் தாக்குதலுக்கு உள்ளாகி மரித்துக் கிடந்தான். மற்றவர்களின் பாரத்தைச் சுமக்க விரும்பாதது எத்தனை ஆபத்துக்குள் கொண்டு வந்து விட்டுவிட்டது. ஜெபத்திலும் வேண்டுதலிலும், கொடுப்பதிலும் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்போமாக!

'தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனே அதை நித்திய ஜீவ காலமாய்க் காத்துக் கொள்வான்'' (யோவான் 12:25) (இ)

### வித்தாரம்..

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணுய் இருக்குது எண்டு தகவல்கள் வந்து கொண்டிருக்குது. அதாவது தமிழ்மக்கள் பாதுகாப்புடனும், நிம்மதியுடனும் வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை மீண்டும் உருவாக்கவேணும் எண்டதிலைதான் அதுக்கு அக்கறையாம்.

போற்றுவார் போற்றட்டும், புளுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும் எடுத்த கருமத்தை முடித்துவிடவேணும் எண்ட கோட்பாடு இந்தியாவுக்கு! உது விளங்காமல், சிலபேர், சந்திரனைப் பாத்து நாய் குலைச்சமாதிரி மேடைக்குமேடை குலைச்சுக் கொண்டிருக்கினம்! வீணுய்த்தொண்டை கிழியக் கத்தி நாவறண்டு வியாதி பிடிக்கப் போகுது!

### ஊர்காவற்- --

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

போராடுவேன்.

★ தொழில் வாய்ப்பு, விவசாய அபிவிருத்தி, குடிசைக் கைத்தொழில் வளர்ச்சி, வர்த்தக, கைத்தொழில், கல்வி மற்றும் சமூக முன்னேற்றங்களை எம்.பி.யாகத் தெரிவாகி ஆறு மாதங்களுக்குள் செய்து தருவேன்.

★ தெரிவு செய்யப்பட்டால் ஊர்காவற்றுறைத் தொகுதியில் மூன்று வருடங்களின் பின்னர் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவேன். வாக்காளர்கள் என்னைத் தொடர்ந்து விரும்புகிறார்களா என்பதை அறியவே இந்த சர்வசன வாக்கெடுப்பு.

இப்படி திரு. முதியான்சே தென்னக்கூனின் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது என்று கொழும்பில் இருந்து வெளியாகும் நாளிதழ் ''டெய்லிநியூஸ்'' செய்தி வெளியிட்டிருக்கின்றது. (இ-எ)

## தபால் சேவகருக்கு ஏற்பட்ட கதி!

மட்டக்களப்பு, ஜூலை 5

பொலீஸ் நிலையத்திற்கு தபால் விநியோகிக்கச் சென்ற தபால் சேவகர் ஒருவர் அங்கிருந்த முகமூடியின் தலையாட்டத்தை அடுத்து தடுத்து வைக்கப்பட்டார்.

தடுத்து வைக்கப்பட்டவர் மட்டக்களப்பு தபால் நிலையச் சேவகரான கே. வேலுப்பிள்ளை (30 வயது). இவர் மூன்று குழந்தைகளுக்குத் தந்தை.

மறுநாள் தபால் அதிபர் பொலீஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு அவரிடம் தபால் சேவகரின் சைக்கிளும் ஏனைய கடிதங்களும் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்டன. (இ-21)

## இன்றும் நாளையும் சென்பற்றிக்ஸ் அகதி முகாமில்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சென் பற்றிக்ஸ் கல்லூரி அகதி முகாமைச் சேர்ந்த 190 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 57 அகதிகளுக்கு இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் இன்றும் நாளையும் வழங்கப் படவுள்ளன.

இந்திய-இலங்கை, யாழ் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள்உணவு விநியோக வேலைகளை மேற்பார்வையிடுவர்.

உணவு வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. மாணிக்கவாசகர் ஒழுங்கு படுத்தியுள்ளார். (இ-ள)

### பொலீஸ்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தருகின்றது. இப்படியான செயல்கள் காட்டுமிராண்டித்தனமானவை மனிதத்தன்மையற்றவை. இச் சம்பவம் குறித்து பொலீஸ் மா அதிபர் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவாளியாகக் காணப்படும் பொலீஸார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

இப்படி தீர்ப்பில் கூறப் பட்டது.

பாணந்துறை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் சிசில் கொடித்துவக்கு, சப் இன்ஸ்பெக்டர் முனசிங்க, கான்ஸ்டபிள் காமினி ஆகியவர்கள் பிரதிவாதிகளாக முறைப்பாட்டில் காட்டப்பட்டிருந்தனர். (இ-எ)

### வல்லரசு----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் கண்காணிப்புப் பிரிவின் இரண்டு நாள் கூட்டம் நேற்று ஆரம்பமானது.

கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே திரு. பந்த் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்து தேசிய தகவல் மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### வளலாய்-----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் இடம்பெயர்ந்திருப்பவர்களுக்கு சிறுப்பிட்டி வித்தியாலயத்திலும், ஆவரங்கால் நடராசராமலிங்கம் வித்தியாலயத்திலும், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியிலும் வைத்து 6 ஆம் 7 ஆம் திகதிகளில் பொருள்கள் வழங்கப் படும். (இ-119)

# ஜெய்ப்பூர் கால்: மனுச் செய்தவர்களை தொடர்புகொள்ளக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்துவதற்காக விண்ணப்பித்தவர்களை உடன் தொடர்பு கொள்ளுமாறு கொழும்பு நட்புறவுச் சங்க யாழ் கிளை நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

செயற்கைக் கால் பொருத்துவதற்காக,ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும்,புதிதாக மனுச் செய்ய விரும்புபவர்களும் அலுவலக நாட்களில் யாழ் தொழிற்சாலைக்கு நேரடியாக சமுகம் அளிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலை சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதியில் தற்போது இயங்கி வருகின்றது.

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் வேலைகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதாக யாழ் கிளை நிர்வாகிகளில் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-ள)

## நவர்ட்டிலோவா மீண்டும் சாம்பியன்

லண்டன், ஜூலை 4

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் மார்ட்டினா நவர்ட்டிலோவா 8 ஆவது தடவையாக சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார். (இ)

### உள் அர்த்---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

லங்கா அரசு திட்டமிடுகின்றது.

தேர்தல்களில் தமிழரின் தொகுதிகளைக் கைப்பற்றினாலும் போரை நிறுத்த முடியாது -

இப்படி திரு. பால்சிங்கம் சொன்னார். (இ.எ)

### இராணுவம்.....

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

வைச் சங்கப் பிரதிநிதிகளிடம் மக்கள் கேட்டுக் கொண்டனர்.

பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்த செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் அவர்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பொருள்களை வழங்கினர். (இ-10)

## ஆக 15 இல் உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, ஜூலை 5

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் எந்த ஒரு சபைக்கும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அங்கீசரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன மட்டுமே வேட்பாளர்களை நிறுத்தி உள்ளன. (அ)

### இரவில்----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகள் எலும்பும் தோலுமாகக் காட்சி அளிக்கின்றனர். தாக்கப்பட்டதனால் சிலருக்கு நெஞ்சுநோவும் ஏற்பட்டுள்ளது.

(வளரும்)


**நீத்தார் பட்டியல்**

## செல்வன் செல்வமணியம் ஞானேந்திரன்

முன்னாள் ஏயர்சிலோன் ஊழியரும் தற்போது விநாயகர் ரேடிங் கம்பெனியில் கடமையாற்றுபவருமாகிய செல்வமணியத்தின் அருமை மகன் செல்வன் ஞானேந்திரன் கடந்த திங்கட்கிழமை 29 - 06 - 1987 அன்று மேற்கு ஜெர்மனியில் தீ விபத்தில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற முத்துச்சாமியின் பேரனும் நாகரத்தினத்தின் (தாயார்) அன்பு மகனும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம், கமலாம்பாள், கிருஷ்ணசாமி ஆகியோரின் பெருமகனும் யோகேஸ்வரியின் சகோதரரும் சண்முகலிங்கத்தின் மைத்துனரும் காலஞ்சென்ற வாலாம்பிகை, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், வரதராஜா,றெங்கநாதன், புனிதம்மா,கருணாதேவி,இந்திராணி,இராசமணி, ஜெகதாம்பாள் ஆகியோரின் மருமகனும் செல்வி ராதையின் அன்பு மாமனும் ஆவர்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**M. S. மணியம்**

122/5, 4ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
யாழ்ப்பாணம். (1262)



இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 05-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Sunday July 05, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org